53) பொற்கிழி என்பதன் பொருள்
1.பணமுடிப்பு 2.பொன்முடிப்பு 3. பொற்காசுகள் 4. பட்டாடை
விடை: 2.பொன்முடிப்பு

H.R.C-PDKT

54) திருவிளையாடற் புராணத்தில் உள்ள விருத்தப்பாக்களின் எண்ணிக்கை
1.2563 2. 5623 3. 3363 4. 1263
விடை: 3. 3363

55) புல்லாகிப்பூடாய் எனத்தொடங்கும் வரிகள்
1. திருவாசக வரிகள் 2. மணிமேகலையின் வரிகள் 3. சிலப்பதிகாரம்
4. தேவார வரிகள்
விடை: 1. திருவாசக வரிகள்

56) அரியணையைத் துறந்து வைணவத் தொண்டர் கோலத்தை ஏற்றவர்
1.திருமங்கை மன்னன் 2. நம்மாழ்வார் 3. குலசேகரர் 4. திருமழிசை ஆழ்வார்
விடை: 3. குலசேகரர்

57) குலசேகரர் வடமொழியில் இயற்றிய நூல்
1.பெரிய திருமொழி 2.முகுந்தமாலை 3. இரண்டைமணிமாலை 4. திருமடல்
விடை: 2.முகுந்தமாலை

58) குலசேகராழ்வார் ------------ நாட்டைச் சேர்ந்தவர்
1.சோழநாடு 2.பாண்டிய நாடு 3. சேரநாடு 4. பல்லவநாடு
விடை: 3. சேரநாடு

59) தாண்டகம் பாடுவதில் வல்லவர்
1.சம்பந்தர் 2.மாணிக்கவாசகர் 3. திருநாவுக்கரசர் 4. சுந்தரர்
விடை: 3. திருநாவுக்கரசர்

60) அழுது அடியடைந்த அன்பர்
1.சுந்தரர் 2. அப்பர் 3. சேக்கிழார் 4. மாணிக்கவாசகர்
விடை: 4. மாணிக்கவாசகர்

61) திருநாவுக்கரசர்க்குப் பெற்றோர் இட்ட பெயர்
1.ஆளுடையபிள்ளை 2. மருணீக்கியார் 3. வாகீசர் 4. அப்பர்
விடை: 2. மருணீக்கியார்

62) சம்பந்தர் தேவாரத்தில் இன்று கிடைக்கும் பாடல்கள்
1. 254 2. 163 3. 584 4. 684
விடை: 3. 584

63) என் கடன் பணி செய்து கிடப்பதே - என்று கூறியவர்
1. சுந்தரர் 2. மாணிக்கவாசகர்
3. திருநாவுக்கரசர் 4. திருஞானசம்பந்தர்
விடை: 3. திருநாவுக்கரசர்

64) திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று அழைத்தவர்
1.வியாசர் 2. ஆதி சங்கரர் 3. வான்மீகி 4. ராமானுஜர்
விடை: 2. ஆதி சங்கரர்

65) சீறாப்புராணத்தை இயற்றியவர்

H.R.C-PDKT

1.உமறுப்புலவர் 2.சவ்வாதுப் புலவர் 3.சர்க்கைப் புலவர் 4.குணங்குடியார்
விடை: 1.உமறுப்புலவர்

66) தருமசேனர் என்ற பெயரைக் கொண்டவர்
1. சுந்தரர் 2. மாணிக்கவாசகர்
3. சம்பந்தர் 4. திருநாவுக்கரசர்
விடை: 4. திருநாவுக்கரசர்

67) "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று பாடியவர்
1. சுந்தரர் 2. மாணிக்கவாசகர் 3. திருநாவுக்கரசர் 4. திருஞானசம்பந்தர்
விடை: 3. திருநாவுக்கரசர்

68) ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே என்று பாடியவர் யார்
1.சுந்தரர் 2. அப்பர் 3. சம்பந்தர் 4. மாணிக்கவாசகர்
விடை: 2. அப்பர்

69) வைணவம் தந்த செல்வி, சூடிக்கொடுத்த சுடர்கொடி என்று போற்றப்படுபவர்
1.காரைக்காலம்மையார் 2. ஆண்டாள் 3. மங்கையர்க்கரசியார் 4. குந்தவை
விடை: 2. ஆண்டாள்

70) நாராயணனே நமக்கே பறைதருவான் - இவ்வரி இடம்பெற்ற நூல்
1.பெரியதிருமொழி 2. பெரியதிருமடல் 3. திருப்பாவை 4. திருவெம்பாவை
விடை: 3. திருப்பாவை

71) பத்துப் பருவங்களைக் குறிக்கும் நூல்
1.பிள்ளைத்தமிழ் 2. உலா 3. கோவை 4. கலம்பகம்
விடை: 1.பிள்ளைத்தமிழ்

72) நாலாயிர திவ்வியப்பிரபந்தத்துக்கு உரை வழங்கியவர்
1.நச்சினார்க்கினியர் 2. கிருட்டிணபிள்ளை 3.பெரியவாச்சான்பிள்ளை 4. இளம்பூரணர்
விடை: 3.பெரியவாச்சான்பிள்ளை

73) கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் சைவத்தை காத்தவர்
1.அப்பர் 2. திருஞானசம்பந்தர் 3. மாணிக்கவாசகர் 4. சுந்தரர்
விடை: 2. திருஞானசம்பந்தர்

74) யோகநெறியில் இறைவைனைப் பாடியவர்
1.சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. திருமூலர்
விடை: 3. சுந்தரர்

75) மாணிக்கவாசகர் ---------- நெறியில் இறைவனைப் பாடினார்
1.யோகம் 2. ஞானம் 3. அத்வைதம் 4. துவைத
விடை: 2. ஞானம்

76) திருநாவுக்கரசரின் தமக்கையார் பெயர்
1.திலகவதியார் 2. மங்கையர்க்கரசியார் 3. இசைஞானியார் 4. மாதவியார்
விடை: 1.திலகவதியார்

77) நம்பியாரூரார் எனப்படும் நாயன்மார்
1.திருநாவுக்கரசர் 2. நம்பியாண்டார் நம்பி 3. சுந்தரர் 4. சம்பந்தர்
விடை: 3. சுந்தரர்

78) வன்தொண்டன் எனப்படுபவர்
1.புகழ்சோழர் 2. அரிவட்டாயர் 3. ஆனாயநாயனார் 4. சுந்தரர்
விடை: 4. சுந்தரர்

79) மாணிக்கவாசகரின் இயற்பெயர்
1. திருவாதவூரார் 2. மருள்நீக்கியார் 3. வாகீசர் 4. ஞானியார்
விடை: 1. திருவாதவூரார்

80) திருமூலரின் பாடல்கள் --------------- திருமுறையாகப் பகுக்கப்பட்டுள்ளன
1.ஒன்றாம் 2. ஒன்பதாம் 3. எட்டாம் 4. பத்தாம்
விடை: 4. பத்தாம்

81) கிறித்தவக் கம்பர் என்றழைக்கப்படுபவர்
1.எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை 2. வீரமாமுனிவர் 3. கால்டுவெல் 4. ஜி.யு.போப்
விடை: 1.எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை

82) இரட்சணிய மனோகரம் எனும் நூலை எழுதியவர்
1.வேதநாயகம் பிள்ளை 2. சுந்தரம்பிள்ளை
3. எச்.ஏ.கிருஷ்ணப் பிள்ளை 4. வீரமாமுனிவர்
விடை: 3. எச்.ஏ.கிருஷ்ணப் பிள்ளை

83) பெத்தலகேம் குறவஞ்சி - நூலை இயற்றியவர்
1 வீரமாமுனிவர் 2. வேத நாயகம் சாஸ்திரியார்
3. ஜி.யு.போப் 4. அருமை நாயகம்
விடை: 2. வேத நாயகம் சாஸ்திரியார்

84) பிறந்த குழந்தைகளுக்கு பாடுவது
1.காதல் பாடல் 2. தாலாட்டுப் பாடல் 3. நடவுப் பாட்டு 4. கும்மிப் பாடல்
விடை: 2. தாலாட்டுப் பாடல்.

85) சாமி கும்பிடுவோர் பாடுவது
1. தொழிற் பாடல் 2. ஒப்பாரி 3. வழிப்பாட்டுப் பாடல் 4. தெம்மாங்குப் பாடல்
விடை: 3. வழிப்பாட்டுப் பாடல்.

86) இறந்தோர்க்குப் பாடுவது
1. ஒப்பாரி பாடல் 2. நலுங்குப் பாடல் 3. தொழிற் பாடல் 4. தெம்மாங்கு
விடை: 1. ஒப்பாரி பாடல்.

H.H.R.C-PDKT

87) திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் பாடப்பாடுவது
1. ஒப்பாரி, தெம்மாங்கு 2. சடங்கு பாடல், கொண்டாட்டப் பாடல்
3. நடவுப் பாட்டு, தொழிற் பாடல் 4. வழிபாட்டுப் பாடல், காதல் பாடல்
விடை: 2. சடங்கு பாடல், கொண்டாட்டப் பாடல்.

88) "ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை மாற்றிப் பிறக்க மருந்தெனக்கு கிட்டுமென்றால் ஊற்றைச் சடலம் விட்டேஎன் கண்ணம்மா! உன்பாதஞ் சேரேனோ!" எனப் பாடிய சித்தர்
1. அழுகணிச் சித்தர் 2. கடுவெளிச் சித்தர்
3. குதம்பைச் சித்தர் 4. அகப்பேய் சித்தர்
விடை: 1. அழுகணிச் சித்தர்

89) சித்தர்களது சமயம்
1.சன்மார்க்கம் 2. சமரச சன்மார்க்கம்
3. சைவம் 4. வைணவ நெறி
விடை: 2. சமரச சன்மார்க்கம்

90) சித்தர்களது மரபு --------------------------- தொடங்குகின்றது
1. திருமூலர் 2. அகத்தியர் 3. சிவவாக்கியர் 4. அழுகணிச்சித்தர்
விடை: 1. திருமூலர்

91) சித்தர்களில் முதன்மையானவர்
1. திருமூலர் 2. சிவவாக்கியர் 3. அகத்தியர் 4. குதம்பைச் சித்தர்
விடை: 3. அகத்தியர்

92) நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் என்று பாடியவர்
1. சிவவாக்கியர் 2. பாம்பாட்டிச் சித்தர் 3. குதம்பைச்சித்தர் 4. அகப்பேய்சித்தர்
விடை: 1. சிவவாக்கியர்

93) பாவம் செய்யாதிரு மனமே! என்று பாடிய சித்தர்
1. அகப்பேய் சித்தர் 2. குதம்பைச் சித்தர் 3. கடுவெளிச் சித்தர் 4. சிவவாக்கியர்
விடை: 3. கடுவெளிச் சித்தர்

94) 63 நாயன்மார்களுள் ஒருவரும், பதினெண் சித்தர்களுள் ஒருவருமானவர்
1. குலசேகர ஆழ்வார் 2. திருமூலர் 3. சம்பந்தர் 4. அப்பர்
விடை: 2. திருமூலர்

95) ஆண்டாள் நாச்சியார் நீராடப் போவதற்குத் தேர்ந்தெடுத்த மாதம்
1.தை 2. மாசி 3. சித்திரை 4. மார்கழி
விடை: 4. மார்கழி

96) ஆண்டாள் நாச்சியார் ............... மணப்பதற்கு உறுதியாக இருந்தார்
1. முருகனை 2. பிள்ளையாரை 3. திருமாலை 4. சிவனை
விடை: 3. திருமாலை

97) ஆண்டாளின் திருப்பாவை ............ பாடல்களால் ஆனது
1. 30 2. 50 3. 40 4. 20
விடை: 1. 30

98) வைணவராக இருந்து கிறிஸ்துவத்தை தழுவியவர் யார்?
1. வேதநாயகர் 2. H.A.கிருஷ்ண பிள்ளை
3. வேதநாயகம்பிள்ளை 4. செய்கு தம்பியார்
விடை: 2. H.A.கிருஷ்ண பிள்ளை

99 "இரட்சண்யம்" என்பதன் பொருள்
1. இறைவன் ஈடேற்றம் 2. கல்வி ஈடேற்றம்
3. ஆன்ம ஈடேற்றம் 4. இவற்றில் எதுவுமில்லை
விடை: 3. ஆன்ம ஈடேற்றம்

100) உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்
1.குமண வள்ளல் 2. பாரி வள்ளல் 3. வள்ளல் சீதக்காதி 4. வள்ளல் சடையப்பர்
விடை: 3. வள்ளல் சீதக்காதி

H.H.R.C-PDKT

# அலகு – 4 தமிழறிஞர்களும் தமிழ்த் தொண்டும்

1)பாரதியாரின் இயற்பெயர்
1.சுப்பையா 2. முருகையா 3. பாரதி 4. மறைமலை
விடை: 1.சுப்பையா
2) விடுதலைக்கவி, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி என்று அழைக்கப்பட்டவர்
1. பாரதிதாசன் 2. கவிமணி 3. பாரதியார் 4. சோமசுந்தரபாரதியார்
விடை: 3. பாரதியார்

3) நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா என்று பாரதியைப் புகழ்ந்து கூறியவர்
1. கவிமணி 2. கல்கி 3. நாமக்கல்லார்
4. பாரதிதாசன்
விடை: 4. பாரதிதாசன்

4) காளிதாசன் சக்திதாசன் என்ற புனைப் பெயர்களில் எழுதியவர்
1. கவிமணி 2. பாரதியார் 3. நாமக்கல்லார் 4. பாரதிதாசன்
விடை: 2. பாரதியார்

5) தேசியக்கவி மகாகவி என்று பாரதியைப் சிறப்பித்துக் கூறியவர்
1.பாரதிதாசன் 2. கவிமணி 3. வ.வே.சு ஐயர் 4. வ.ரா. (ராமசாமி ஐயங்கார்)
விடை: 4. வ.ரா. (ராமசாமி ஐயங்கார்)

6) பாரதியின் 'தனிமை இரக்கம்' பாடல் முதன் முதலாக இந்நாளேட்டில் வெளிவந்தது
1. விவேக பானு 2. சுதேசமித்திரன் 3. இந்தியா 4. சக்கரவர்த்தினி
விடை: 1. விவேக பானு

7) "தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும்" என்று பாடியவர்
1. கவிமணி 2. பாரதியார் 3. நாமக்கல்லார் 4. பாரதிதாசன்
விடை: 2. பாரதியார்

8) பாரதிதாசனின் இயற்பெயர்
1.சுப்புரத்தினம் 2. கனகசுப்புரத்தினம்
3. சுப்பையா 4. சுப்பிரமணியம்
விடை: 2. கனகசுப்புரத்தினம்

9) பாரதிதாசனை புரட்சிக்கவி என்று பாராட்டியவர்
1. அறிஞர் அண்ணா 2. பாரதியார் 3. பெரியார் 4. வாணிதாசன்
விடை: 1. அறிஞர் அண்ணா

10) புதுச்சேரி அரசாங்கத்தின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை இயற்றியவர்
1. கவிமணி 2. பாரதியார் 3. நாமக்கல்லார் 4. பாரதிதாசன்
விடை: 4. பாரதிதாசன்

11) "தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என்று பாடியவர்
1.பாரதிதாசன் 2. கவிமணி 3. பாரதியார் 4. சுரதா

H.R.G-PDKT

விடை: 1. பாரதிதாசன்

12) பாரதிதாசன் ...................... நூலுக்காக சாகித்திய அகாடமி விருதினைப் பெற்றார்
1. பாண்டியன் பரிசு 2. பிசிராந்தையார்" நாடக நூலுக்கு
3. சஞ்சீவபர்வதத்தின் சாரல் 4. இருண்டவீடு
விடை: 2. பிசிராந்தையார்" நாடக நூலுக்கு

13) பாரதிதாசன் நடத்திய இதழின் பெயர்
1.சுதேசமித்திரன் 2. விடுதலை 3. குயில் 4. குடியரசு
விடை: 3. குயில்

14) "கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்" என்று பாடியவர்
1.பாரதிதாசன் 2. கவிமணி 3. பாரதியார் 4. சுரதா
விடை: 1.பாரதிதாசன்

15) மலைக்கள்ளன் என்ற நாவலின் ஆசிரியர்
1.பாரதிதாசன் 2. கவிமணி 3. பாரதியார் 4. நாமக்கல் கவிஞர்
விடை: 4. நாமக்கல் கவிஞர்

16) தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர்
1.பாரதிதாசன் 2. நாமக்கல் கவிஞர் 3. பாரதியார் 4. சுரதா
விடை: 2. நாமக்கல் கவிஞர்

17) காந்தியக் கவிஞர்' என்று புகழ் பெற்றவர்
1.பாரதிதாசன் 2. சோமசுந்தரபாதியார் 3. பாரதியார் 4. நாமக்கல் கவிஞர்
விடை: 4. நாமக்கல் கவிஞர்

18) 'பலே பாண்டியர்' என்று பாரதியாரால் பாராட்டப்பட்டவர்
1.பாரதிதாசன் 2. நாமக்கல் கவிஞர் 3. வ.உ.சிதம்பரம்பிள்ளை 4. சுரதா
விடை: 2. நாமக்கல் கவிஞர்

19) "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு" என்று பாடியவர்
1.பாரதிதாசன் 2. சோமசுந்தரபாதியார் 3. பாரதியார் 4. நாமக்கல் கவிஞர்
விடை: 4. நாமக்கல் கவிஞர்

20) நாமக்கல் கவிஞர் முதல் முதலாக வரைந்த படம்
1. இராமகிருஷ்ண பரமஹம்சர் 2. பாரதியார்
3. காந்தி 4. இராஜாஜி
விடை: 1. இராமகிருஷ்ண பரமஹம்சர்

21) தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கிக் கல்லூரிப் பேராசிரியராக ஓய்வு பெற்றவர்.
1. பாரதியார் 2. சோமசுந்தர பாரதியார்
3. கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை 4. வாணிதாசன்
விடை: 3. கவிமணிதேசியவிநாயகம்பிள்ளை



H.H.R.C.PDKT

22) தேசிகவிநாயகம்பிள்ளைக்கு கவிமணி என்ற பட்டத்தை வழங்கியவர்
1. தமிழ்வேள் உமாமகேசுவரபிள்ளை 2. சி.வை.தாமோதரம்பிள்ளை
3. பாரதிதாசன் 4. பச்சையப்ப முதலியார்
விடை: 1. தமிழ்வேள் உமாமகேசுவரபிள்ளை

23) கதர் பிறந்த கதை என்ற நூலின் ஆசிரியர்
1. பாரதியார் 2. சோமசுந்தர பாரதியார்
3. கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை 4. வாணிதாசன்
விடை: 3. கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை

24) "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவஞ் செய்திட வேண்டுமம்மா.... என்று பாடியவர்
1. பாரதியார் 2. சோமசுந்தர பாரதியார்
3. பாரதிதாசன் 4. கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை
விடை: 4. கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை

25) "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்று பாரதியைப் புகழ்ந்து பாடியவர்
1. பாரதியார் 2. சோமசுந்தர பாரதியார்
3. கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை 4. வாணிதாசன்
விடை: 3. கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை

26)முடியரசனின் இயற்பெயர்
1. துரைராசு 2. விருத்தாசலம்
3. காமராசு 4. கவியரசன்
விடை: 1. துரைராசு

27) முடியரசன் ………… ….. தமிழாசிரியராகப் பணியாற்றினார்
1.தேவகோட்டைப் பள்ளியில் 2. காரைக்குடியில் உள்ள மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் 3. பள்ளத்தூர் பள்ளியில் 4. திருப்பத்தூர் பள்ளியில்
விடை: 2. காரைக்குடியில் உள்ள மீ.சு. உயர்நிலைப் பள்ளியில்

28) பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில் மூத்தவர்
1. வாணிதாசன் 2. சுரதா 3. முடியரசன் 4. அப்துல்ரகுமான்
விடை: 3. முடியரசன்

29) பூங்கொடி காவியத்தின் ஆசிரியர்
1. வாணிதாசன் 2. முடியரசன் 3. சுரதா 4. அப்துல்ரகுமான்
விடை: 2. முடியரசன்

30) "தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்திவிட்டுத் தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்" என்று பாடியவர்
1. வாணிதாசன் 2. சுரதா 3. முடியரசன் 4. அப்துல்ரகுமான்
விடை: 3. முடியரசன்

31) தமிழ்நாட்டின் வேர்ட்ஸ்வொர்த் என்று அழைக்கப்பட்டவர்
1. வாணிதாசன் 2. சுரதா 3. முடியரசன் 4. அப்துல்ரகுமான்
விடை: 1. வாணிதாசன்

H.R.C-PDKT

32) வாணிதாசனின் இயற்பெயர்
1. நாகசாமி 2. அரங்கசாமி என்ற எத்திராசலு 3. சுப்புரத்தினம் 4. அருணகிரி
விடை: 2. அரங்கசாமி என்ற எத்திராசலு

33) எழில்விருத்தத்தின் ஆசிரியர்
1. வாணிதாசன் 2. சுரதா 3. முடியரசன் 4. அப்துல்ரகுமான்
விடை: 1. வாணிதாசன்

34)சுரதாவின் இயற்பெயர்
1. அரங்கசாமி 2. பழனி 3. வேந்தன் 4. இராசகோபாலன்
விடை: 4. இராசகோபாலன்

35உவமைக் கவிஞர் என்று போற்றப்படுபவர்
1. வாணிதாசன் 2. சுரதா 3. முடியரசன் 4. அப்துல்ரகுமான்
விடை: 2. சுரதா

36) கண்ணதாசனின் இயற்பெயர்
1. அண்ணாமலை 2. முத்தையா 3. இராகோபால் 4. கந்தையா
விடை: 2. முத்தையா

37) "போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரி தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்" என்று பாடியவர்
1. பாரதியார் 2. சுரதா 3. பாரதிதாசன் 4. கண்ணதாசன்
விடை: 4. கண்ணதாசன்

38) உடுமலை நாராயணகவியின் இயற்பெயர்
1. நாராயணசாமி 2. நாராயணன் 3. அரங்கசாமி 4. பெரியதம்பி
விடை: 1. நாராயணசாமி

39) பகுத்தறிவுக் கவிராயர் என்று அழைக்கப்பட்ட கவிஞர்
1. பாரதிதாசன் 2. வாணிதாசன் 3. முடியரசன் 4. உடுமலை நாராயணகவி
விடை: 4. உடுமலை நாராயணகவி

40) மக்கள் கவிஞர் என்று அழைக்கப்பட்டவர்
1. கண்ணதாசன் 2. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்
3. தமிழொளி 4. வாணிதாசன்
விடை: 2. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்

41) பாரதிதாசனால் எனது வலதுகை என்று புகழப்பட்டவர்
1. முடியரசன் 2. தமிழொளி
3. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் 4. வாணிதாசன்
விடை: 3. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்

42) திரைக்கவித் திலகம் என்று போற்றப்பட்டவர்

HHRCPDKT

1.வைரமுத்து 2. மருதகாசி 3. கண்ணதாசன் 4. உடுமலை நாராயணகவி
விடை: 2. மருதகாசி

43) "ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே" என்று பாடியவர்
1.கலியாணசுந்தரம் 2. கண்ணதாசன் 3. மருதகாசி 4. உடுமலை நாராயணகவி
விடை: 3. மருதகாசி

44) ந. பிச்சமூர்த்தியின் இயற்பெயர்
1. பிச்சு 2. ந.வேங்கட மகாலிங்கம் 3. வேங்கடராமன் 4. திருவேங்கடம்
விடை: 2. ந.வேங்கட மகாலிங்கம்

45)தமிழ் புதுக்கவிதையின் பிதாமகர் என்று போற்றப்பட்டவர்
1 வாணிதாசன் 2. பாரதியார்
3. ந.பிச்சமூர்த்தி 4. தமிழொளி
விடை: 3. ந.பிச்சமூர்த்தி

46) எழுத்து என்ற இலக்கிய இதழைத் தொடங்கியவர்
1. ந.பிச்சமூர்த்தி 2. மு.மேத்தா 3. சி. மணி 4. சி.சு.செல்லப்பா
விடை: 4. சி.சு.செல்லப்பா

47) சுதந்திர தாகம் என்ற நாவலுக்கு சாகித்திய அகாடெமி விருதினைப் பெற்றவர்
1. ந.பிச்சமூர்த்தி 2. சி.சு.செல்லப்பா 3. சி. மணி 4. மு.மேத்தா
விடை: 2. சி.சு.செல்லப்பா

48) படிமக் கவிஞர் ஆன்மீகக் கவிஞர் என்று அழைக்கப்படுவர்
1. ந.பிச்சமூர்த்தி 2. சி.சு.செல்லப்பா 3. தருமு சிவராமு 4. மு.மேத்தா
விடை: 3. தருமு சிவராமு

49) பிரமிள் என்ற புனைப்பெயரில் எழுதியவர்
1. தருமு சிவராமு 2. சி.சு.செல்லப்பா 3. மனுஷ்யபுத்ரன் 4. மு.மேத்தா
விடை: 1. தருமு சிவராமு

50) பசுவய்யாவின் இயற்பெயர்
1.ரங்கசாமி 2. ராமசாமி 3. சுந்தர ராமசாமி 4. ரெங்கன்
விடை: 3. சுந்தர ராமசாமி

51) புதுக்கவிதை வரலாற்றில் துருவ நட்சத்திரம் என்று அழைக்கப்பட்டவர்
1. ந.பிச்சமூர்த்தி 2. சி.சு.செல்லப்பா 3. தருமு சிவராமு 4. பசுவய்யா
விடை: 4. பசுவய்யா

52) செம்மண் மடல்கள் என்ற கவிதை நூலின் ஆசிரியர்
1. இரா. மீனாட்சி 2. கலாப்பிரியா 3. சல்மா 4. பசுவய்யா
விடை: 1. இரா. மீனாட்சி

53) புதுக்கவிதை குறித்த முதல் ஆய்வுநூலை எழுதியவர்

HHRC PDKT

1. ந.பிச்சமூர்த்தி 2. சி.சு.செல்லப்பா 3. சி. மணி 4. மு.மேத்தா
விடை: 3. சி. மணி

54) புதுக்கவிதை குறித்த முதல் ஆய்வு நூல்
1.யாப்பும் கவிதையும் 2. யாப்பும் பாவும் 3. நகரம் கவிதை 4. ஏதுமில்லை
விடை: 1.யாப்பும் கவிதையும்

55) சர்ப்ப யாகம் புதுக்கவிதை நூலின் ஆசிரியர்
1. ந.பிச்சமூர்த்தி 2. சிற்பி பாலசுப்பிரமணியன் 3. சி. மணி 4. மு.மேத்தா
விடை: 2. சிற்பி பாலசுப்பிரமணியன்

56) நந்தவன நாட்கள் புதுக்கவிதை நூலின் ஆசிரியர்
1. பசுவய்யா 2. சிற்பி பாலசுப்பிரமணியன் 3. சி. மணி 4. மு.மேத்தா
விடை: 4. மு.மேத்தா

57) "தாஜ்மஹாலின் காதிலே ராம காதை ஓதலாம்" என்று கவிதை படைத்தவர்
1. மு.மேத்தா 2. வைத்தீஸ்வரன் 3. அப்துல்ரகுமான் 4.இன்குலாப்
விடை: 1. மு.மேத்தா

58) ஈரோடு தமிழன்பனின் இயற்பெயர்
1.மறைமலை 2.மலையரசன் 3. ஜெகதீசன் 4. ஈஸ்வரன்
விடை: 3. ஜெகதீசன்

59) "கவிஞர்களின் கவிஞர்" என்று அழைக்கப்பட்டவர்
1. ஞானக்கூத்தன் 2. வைத்தீஸ்வரன் 3. அப்துல்ரகுமான் 4.இன்குலாப்
விடை: 1. ஞானக்கூத்தன்

60) இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கழகம் நிறுவக் காரணமாக இருந்தவர்
1. ஞானக்கூத்தன் 2. சாலை இளந்திரையன் 3. அப்துல்ரகுமான் 4. இன்குலாப்
விடை: 2. சாலை இளந்திரையன்

61) "குறும்பா" என்னும் பெயரிலும் "குறுந்தொகையின் குழந்தைகள்" என்ற பெயரிலும் ஹைக்கூக் கவிதைகள் எழுதியவர்
1. ஞானக்கூத்தன் 2. சாலை இளந்திரையன்
3. ஆலந்தூர் கோ. மோகனரங்கன் 4. இன்குலாப்
விடை: 3. ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

62) நேரு தன் மகள் இந்திராவுக்கு உலக வரலாற்றை விவரித்து எழுதிய 176 கடிதங்கள் தொகுக்கப்பட்டு …………….. என்ற பெயரில் தனிப் புத்தகமாக வெளிவந்துள்ளது.
1. இந்திய வரலாறு 2. ஐரோப்பிய வரலாறு
3. 'உலக வரலாறு' 4. அமெரிக்க வரலாறு
விடை: 3. 'உலக வரலாறு'

H.R.C-PDKT

63) அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு என நான்கு கடித இலக்கிய நூல்களை எழுதியவர்
1. மு.வ. 2. அறிஞர் அண்ணா
3. கலைஞர் 4. குன்றக்குடி அடிகளார்
விடை: 1. மு.வ.

64) "தமிழர்கள் கூடிக்கூடி செயல் செய்து உயரும் வல்லமை உண்டு என்பதை நாம் உலகிற்கு உணர்த்தும் நாள் வர வேண்டும்" என்று கடிதத்தின் வழி வலியுறுத்தியவர்
1. அறிஞர் அண்ணா 2. மு.வ. 3. கலைஞர் 4. குன்றக்குடி அடிகளார்
விடை: 2. மு.வ.

65) "பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்வு சிறந்திடு! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!' என்று வாழ்த்துகளுடன் தம்பிகளைக் கடிதத்தின் வழி கேட்டுக்கொண்டவர் .
1. மு.வ. 2. குன்றக்குடி அடிகளார்
3. கலைஞர் 4. அறிஞர் அண்ணா
விடை: 4. அறிஞர் அண்ணா

66) "நாட்குறிப்பு வேந்தர்" என்று அழைக்கப்படுபவர்
1. ஆனந்தரங்கம் பிள்ளை 2. ஆ. மாதவையா
3. கலைஞர் 4. அறிஞர் அண்ணா
விடை: 1. ஆனந்தரங்கம் பிள்ளை

67) "இந்தியாவின் பெப்பிஸ் எனப் போற்றப்படுவர்
1. கல்கி 2. திரு.வி.க. 3. ஆனந்தரங்கம் பிள்ளை
4. அறிஞர் அண்ணா
விடை: 3. ஆனந்தரங்கம் பிள்ளை

68) தொல்காப்பியர் ................ நாடக உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.
1. மெய்ப்பாட்டியலில் 2. களவியலில் 3. கற்பியலில் 4. மரபியலில்
விடை: 1. மெய்ப்பாட்டியலில்

69) நாடகக் கலை ............... என்பதனை அடிப்படையாக கொண்டது.
1.நடித்துக்காட்டல் 2. ஆடுதல் 3. போலச் செய்தல் 4. பாடுதல்
விடை: 3. போலச் செய்தல்

70) விரல்பட ஆடும் பெண் கலைஞர்கள் ............. எனப்பட்டனர்.
1. விறலியர் 2. கூத்தர் 3. நடனப்பெண் 4. பொருநர்
விடை: 1. விறலியர்

71) திராவிட மொழிகளின் "தாய்" என்று அழைக்கப்படும் மொழி
1. சமஸ்கிருதம்
2. இந்தி
3. தெலுங்கு
4. தமிழ்

H.H.R.C-PDKT

72) மத்தவிலாஸ பிரகடனம் என்ற நகைச்சுவை நாடகத்தை எழுதியவர்
1.மகேந்திரவர்ம பல்லவன் 2. நரசிம்ம வர்மன்
3. சிம்மவிஷ்ணு 4. பரமெஸ்வரவர்மன்
விடை: 1.மகேந்திரவர்ம பல்லவன்

73) "தமிழ்நாடகத் தலைமையாசிரியா" என்று போற்றப்படுபவர்
1.பம்மல் சம்பந்த முதலியார் 2. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்
3. பரிதிமாற்கலைஞர் 4. ஆர். எஸ்.மனோகர்
விடை: 2. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்

74) ………….. என்பது முல்லைக்கும், நெய்தற்கும் உரிய மாலைநேரப் பண்ணாகும்
1.குறிஞ்சி 2. சாதாரி 3. செவ்வழி 4. மருதம்
விடை: 3. செவ்வழி

75) யாழ்முறி பதிகம் பாடியவர்
1.நாவுக்கரசர் 2. சம்பந்தர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்
விடை: 2. சம்பந்தர்

76) பெருநாரை என்பது
1. இசைபற்றிய நூல் 2. நாடகம் குறித்த நூல்
3. ஒப்பனை குறித்த நூல் 4. நடனம் பற்றிய நூல்
விடை: 1. இசைபற்றிய நூல்

77) தமிழில் முதல் சிறுகதை
1.கமலாம்பாள் சரித்திரம் 2. ஒருபிடிச் சோறு 3. குளத்தங்கரை அரசமரம்
4. மங்கையர்க்கரசியின் காதல்
விடை: 3. குளத்தங்கரை அரசமரம்

78) சிற்பம் என்பது
1.அழகுக் கலை 2. ஆயகலை 3. நிகழ்த்துக்கலை 4. முப்பரிமாண கலை
விடை: 4. முப்பரிமாண கலை

79) கலைகளின் விளைநிலம்
1. சோழநாடு 2. சேரநாடு 3. பாண்டியநாடு 4. துளுவநாடு
விடை: 1. சோழநாடு

80) சங்க காலத்தில் ஓவியங்கள் ………… என பெயர் பெற்றது.
1.ஓவச்செய்தி 2. நாழிகைச் செய்தி 3. பாவிகம் 4. வட்டிகைச் செய்தி
விடை: 4. வட்டிகைச் செய்தி

81) மதுரைத் தமிழ்ச் சங்கத்தை தமிழ்வேலி என்று குறிப்பிடும் நூல்
1. பரிபாடல் 2. கலித்தொகை 3. புறநானூறு 4. அகநானூறு
விடை: 1. பரிபாடல்

H.R.C-PDKT

82) கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற மொழிகளுக்குத் தாயாக விளங்குவது
1.சீனம் 2. வடமொழி
3. தமிழ் மொழி 4. இலத்தீன் மொழி
விடை: 3. தமிழ் மொழி

83) அகம், புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்துள்ள மொழி
1.சீனம் 2. தமிழ் மொழி
3. ஆங்கில மொழி 4. இலத்தீன் மொழி
விடை: 2. தமிழ் மொழி

84) தமிழ்மொழி ஓர் உயர்தனிச் செம்மொழி என முதன்முதலாக கூறியவர்
1. கால்டுவெல் 2. கமில்சுவலபில் 3. ஹீராஸ்பாதிரியார் 4. ஜி.யு.போப்
விடை: 1.கால்டுவெல்

85) தமிழிற்கு செம்மொழித் தகுதி கோரிய முதல் தமிழர்
1. மலைமலையடிகள் 2. திரு.வி.க. 3. பரிதிமாற் கலைஞர் 4. ம.பொ.சி.
விடை: 3. பரிதிமாற் கலைஞர்

86) பரிதிமாற் கலைஞரின் 'உயர்தனிச் செம்மொழி' என்ற கட்டுரை மதுரைத் தமிழ்ச்சங்க ...................... மாத இதழில் வெளியிடப்பட்டது
1. செந்தமிழ் 2. செந்தமிழ்ச்செல்வி 3. விவேகபானு 4. கல்கி
விடை: 1. செந்தமிழ்

87) தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றி அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி விழிப்புணர்வு ஏற்படுத்திய சபை
1. கரந்தைத் தமிழ்ச் சங்கம் 2. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை 3. சத்திய ஞானசபை
4. ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்
விடை: 2. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை

88) தமிழ் செம்மொழி குறித்த வரலாற்றுச் சிந்தனையைத் தூண்டியவர்
1. அரு.இராமநாதன் 2. வெ. சு. அழகப்பன்
3. ஆறு.அழகப்பன் 4. பரிதிமாற்கலைஞர்
விடை: 3. ஆறு.அழகப்பன்

89) தமிழின் செம்மொழித் தகுதி பற்றிய அறிக்கையைக் கட்டுரை வடிவில் மத்திய அரசுக்குத் தெரிவித்தவர்
1.மணவைமுஸ்தபா 2. முனைவர் ஜார்ஜ். எல். ஹார்ட்
3. கமில்சுவலபில் 4. மறைமலை இலக்குவனார்
விடை: 2. முனைவர் ஜார்ஜ். எல். ஹார்ட்

90) நடுவண் தமிழை அரசு செம்மொழியாக அறிவித்தது



H.H.R.C.PDKT

1. 12.10.2004 2. 12.10.2005 3. 12.10.2006 4. 12.10.2011
விடை: 1. 12.10.2004

91) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலின் ஆசிரியர்
1. வீரமாமுனிவர் 2. ஜார்ஸ் எல் ஹார்ட் 3. கால்டுவெல் 4. கமில்சுவலபில்
விடை: 3. கால்டுவெல்

92) முதல் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடந்த இடம்
1. கோயம்புத்தூர் 2. மதுரை 3. திருநெல்வேலி 4. மலேசியா
விடை: 1. கோயம்புத்தூர்

93) முதல் செம்மொழி தமிழ் விருது பெற்றவர்
1. முனைவர் ஜார்ஜ் எல். ஹார்ட் 2. மணவை முஸ்தபா 3. பேராசிரியர் அஸ்கோ பார்கோலா 4. கமில்சுவலபில்
விடை: 3. பேராசிரியர் அஸ்கோ பார்கோலா

94) மூல மொழியில் இருந்து தோன்றியவை
1. பொதுமொழிகள் 2. கிளை மொழிகள் 3. தொன்மையான மொழிகள் 4. ஐரோப்பிய மொழிகள்
விடை: 2. கிளை மொழிகள்

95) இந்திய நாட்டை மொழிகளின் காட்சி சாலை எனக் குறிப்பிட்டவர்
1.மறைமலை சி. இலக்குவனார் 2. மணவை முஸ்தபா
3. மறைமலையைடிகள் 4. கு.வெ. பாலசுப்பிரமணியன்
விடை: 4. பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்

96) திராவிடம் என்ற சொல்லை பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தவர்
1. கமில்சுவலபில் 2. மணவை முஸ்தபா 3. கால்டுவெல் 4. ஹீராஸ்பாதிரியார்
விடை: 3. கால்டுவெல்

97) திராவிட மொழிகளுள் மிகவும் தொன்மையான பண்பட்ட மொழி
1. தமிழ் 2. கன்னடம் 3. மலையாளம் 4. தெலுங்கு
விடை: 1. தமிழ்

98) இந்தியத் திராவிட மொழிகள் ஆறு
1. நான்கு 2. ஆறு 3. ஐந்து 4. எட்டு
விடை: 2. ஆறு

99 இந்தியாவில் மொத்தம் ............... மொழிக் குடும்பங்கள் உள்ளன
1. 14 2. 18
3. 12 4. 16
விடை: 3. 12

H.H.R.C-PDKT

100) திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவானதாகும் என்று கூறியவர்
1. ஜி.யு.போப் 2. கால்டுவெல் 3. ஹீராஸ் பாதிரியார் 4. கமில்சுவலபில்
விடை: 3. ஹீராஸ் பாதிரியார்

# அலகு – 5 உரைநடை

1) தொல்காப்பியர் உரைநடையை ................ வகைகளாக வகைப்படுத்தியுள்ளார்
1. நான்கு 2. மூன்று 3. ஏழு 4. பத்து
விடை: 1. நான்கு

2) மணிப்பிரவாள நடை என்பது
1. தெலுங்கும் தமிழும் கலந்து எழுதப்படுவது 2. இந்தியும் தமிழும் கலந்து எழுதப்படுவது 3. வடமொழியும் தமிழும் கலந்து எழுதப்படுவது 4. மலையாளமும் தமிழும் கலந்து எழுதப்படுவது
விடை: 3. வடமொழியும் தமிழும் கலந்து எழுதப்படுவது

3) இந்திய மொழிகளுள் முதன் முதலில் உரைநடை வடிவம் ................. தான் தோன்றியது
1. சமஸ்கிருதத்தில் 2. தெலுங்கு மொழியில் 3. வங்காள மொழியில்
4. தமிழ் மொழியில்
விடை: 4. தமிழ் மொழியில்

4) தமிழில் அச்சான முதல் உரைநடை நூல்
1. எம்பிரான் சதகம் 2. தம்பிரான் வணக்கம் 3. இறைவணக்கம் 4. தமிழ்த்தாய் வணக்கம்
விடை: 2. தம்பிரான் வணக்கம்

5) தமிழ் உரைநடையின் தந்தை
1.இராமலிங்கசுவாமிகள் 2. கவிமணி 3. வ.வே.சு ஐயர் 4. வீரமாமுனிவர்
விடை: 4. வீரமாமுனிவர்

6) தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கி தமிழைச் செழுமையாக வளர்த்தவர்
1. மறைமலையடிகள் 2. ஆறுமுகநாவலர் 3. திரு.வி.க. 4. பரிதிமாற்கலைஞர்
விடை: 1. மறைமலையடிகள்

7) மரணத்தின் பின் மனிதர் நிலை நூலின் ஆசிரியர்
1. திரு.வி.க. 2. மறைமலையடிகள் 3. நாமக்கல்லார் 4. உ.வே.சா.
விடை: 2. மறைமலையடிகள்

8) மானவிஜயம் என்ற நாடகநூலினை எழுதியவர்
1.பம்மல் சம்பந்த முதலியார் 2. ஔவைசண்முகம்
3. சங்கரதாஸ்சுவாமிகள் 4. பரிதிமாற்கலைஞர்
விடை: 4. பரிதிமாற்கலைஞர்

H.H.R.CPDKT

9) சிவப்பிரகாசம் என்பது யாருடைய இயற்பெயராகும்
1. ந.மு. வேங்கடசாமி நாட்டார் 2. பாரதியார் 3. பெரியார் 4. மறைமலையடிகள்
விடை: 1. ந.மு. வேங்கடசாமி நாட்டார்

10) சோழர் சரித்திரம் எனும் நூலின் ஆசிரியர்
1. திரு.வி.க. 2. சதாசிவபண்டாரத்தார் 3. கே.கே.பிள்ளை 4. ந.மு. வேங்கடசாமி நாட்டார்
விடை: 4. ந.மு. வேங்கடசாமி நாட்டார்

11) சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பேராசிரியர்
1. ரா.பி.சேதுப்பிள்ளை 2. பரிதிமாற்கலைஞர் 3. மு.வ. 4. உ.வே.சா.
விடை: 1. ரா.பி.சேதுப்பிள்ளை

12) தமிழகம் ஊரும் பேரும் நூலின் ஆசிரியர்
1. சோமலெ 2. ரா.பி.சேதுப்பிள்ளை
3. மு.வ. 4. பரிதிமாற்கலைஞர்
விடை: 2. ரா.பி.சேதுப்பிள்ளை

13) பயணம் என்பதற்கு செலவு என்ற சொல்லைப் பயன்படுத்தி முதன் முதலாக வழக்கிற்குக் கொண்டுவந்தவர்
1. மறைமலையடிகள் 2. ஆறுமுகநாவலர் 3. திரு.வி.க. 4. பரிதிமாற்கலைஞர்
விடை: 3. திரு.வி.க.

14) சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து என்ற நூலின் ஆசிரியர்
1. திரு.வி.க. 2. கவிமணி 3. நாமக்கல்லார் 4. சுரதா
விடை: 1. திரு.வி.க.

15) தமிழ் ஆய்வுத்துறையின் முன்னோடி 'அன்னைத்தமிழ் அரும் பணியாளர்' என்றும் பாராட்டப்பட்டவர்
1. திரு.வி.க. 2. வையாபுரிப்பிள்ளை 3. வ.வே.சு.ஐயர் 4. நாமக்கல் கவிஞர்
விடை: 2. வையாபுரிப்பிள்ளை

16) கீழ்வருவனவற்றுள் வையாபுரிப்பிள்ளை எழுதிய நூலினைக் குறிப்பிடுக
1. இலக்கிய தீபம் 2. சைவத்தின் சமரசம்
3. உள்ளொளி பயணம் 4. ஆற்றங்கரையினிலே
விடை: 1. இலக்கிய தீபம்

17) உ.வே.சா. வின் இயற்பெயர்
1. சாமிநாதன் 2. சுப்பிரமணியன் 3. மீனாட்சிசுந்தரம் 4. வேங்கடராமன்
விடை: 4. வேங்கடராமன்

18) உ.வே.சா. முதலில் பதிப்பித்த காப்பியம்
1. சிலப்பதிகாரம் 2. சீவகசிந்தாமணி 3. வளையாபதி 4. மணிமேகலை
விடை: 2. சீவகசிந்தாமணி

H.R.-PDKT

19) அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தைத் தொடங்கியவர் 1. ரா.பி.சேதுப்பிள்ளை 2. பரிதிமாற்கலைஞர் 3. மு.வ. 4. உ.வே.சா.
விடை: 4. உ.வே.சா.

20) 1962-இல் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தை தொடங்கியவர்
1. சி. இலக்குவனார் 2. பரிதிமாற்கலைஞர் 3. மு.வ. 4. உ.வே.சா.
விடை: 1. சி. இலக்குவனார்

21) மாணவர் ஆற்றுப்படை என்ற நூலின் ஆசிரியர்
1. மு.வ. 2. பரிதிமாற்கலைஞர் 3. சி. இலக்குவனார் 4. உ.வே.சா.
விடை: 3. சி. இலக்குவனார்

22) மொழிஞாயிறு என்று போற்றப்படுபவர்
1. தேவநேயப் பாவாணர் 2. சி.வை.தாமோதரம்பிள்ளை
3. பாரதிதாசன் 4. மறைமலையடிகள்
விடை: 1. தேவநேயப் பாவாணர்

23) மன்னிப்பு உருதுச்சொல் பொறுத்துக்கொள்க என்பது தமிழ்ச்சொல் என்றவர்
1. நீலாம்பிகையம்மையார் 2. தேவநேயப் பாவாணர்
3. பாரதிதாசன் 4. மறைமலையடிகள்
விடை: 2. தேவநேயப் பாவாணர்

24) இராசமாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்டவர்
1. மறைமலையடிகள் 2. தேவநேயப்பாவாணர்
3. உ.வே.சா. 4. பாவலரேறு பெருஞ்சித்திரனார்
விடை: 4. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

25) தேன்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் போன்ற இதழ்களை நடத்தியவர்
1. மறைமலையடிகள் 2. தேவநேயப்பாவாணர்
3. பாவலரேறு பெருஞ்சித்திரனார் 4. அழ. வள்ளியப்பா
விடை: 3. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

26) ஜி.யு.போப்பிற்குத் தமிழ் கற்பித்தவர்
1. இராமானுஜ கவிராயர் 2. சுப்பிரதீபக் கவிராயர்
3. பொய்யாமொழிப் புலவர் 4. அரசன்சண்முகனார்
விடை: 1. இராமானுஜ கவிராயர்

27) தமிழ் ஆங்கில அகராதி, ஆங்கிலம் - தமிழ் அகராதியை வெளியிட்டவர்
1. யுரேனியஸ் ஐயர் 2. ஜி.யு.போப் 3. வீரமாமுனிவர் 4. ஹீராஸ் பாதிரியார்
விடை: 2. ஜி.யு.போப்

28) தமிழ்மொழிப் பற்றினால் தைரியநாதன் என்று தம் பெயரைத் தனித் தமிழாக்கி கொண்ட வெளிநாட்டறிஞர்
1. யுரேனியஸ் ஐயர் 2. ஜி.யு.போப் 3. வீரமாமுனிவர் 4. ஹீராஸ் பாதிரியார்
விடை: 3. வீரமாமுனிவர்

29) தமிழின் முதல் அகரமுதலி எனப்படும் சதுரகராதியை முதலில் வெளியிட்டவர்
1. யுரேனியஸ் ஐயர் 2. வீரமாமுனிவர் 3. ஜி.யு.போப் 4. ஹீராஸ் பாதிரியார்
விடை: 2. வீரமாமுனிவர்

HR C-PDKT

30) திருக்குறளில் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர்
1. யுரேனியஸ் ஐயர் 2. ஜி.யு.போப் 3. வீரமாமுனிவர் 4. ஹீராஸ் பாதிரியார்
விடை: 3. வீரமாமுனிவர்

31) தமிழ் எழுத்து வரிவடிவத்தை திருத்தி எழுத்துச் சீர்திருத்தம் செய்த வெளிநாட்டறிஞர்
1. யுரேனியஸ் ஐயர் 2. வீரமாமுனிவர் 3. ஜி.யு.போப் 4. ஹீராஸ் பாதிரியார்
விடை: 2. வீரமாமுனிவர்

32) வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டவர்
1. தந்தை பெரியார் 2. காந்தியடிகள் 3. காமராசர் 4. வ.உ.சி
விடை: 1. தந்தை பெரியார்

33) தமிழ்நாட்டின் ரூசோ என்று போற்றப்பட்டவர்
1. அறிஞர் அண்ணா 2. கலைஞர் 3. தந்தை பெரியார் 4. ம.பொ.சி
விடை: 3. தந்தை பெரியார்

34) தன் வாழ்நாளில் 8,600 நாட்கள் 1,31,200 கிலோ மீட்டர் தமிழகம் முழுவதும் பயணம் செய்து சமுதாயத் தொண்டாற்றியவர்
1. அறிஞர் அண்ணா 2. கலைஞர் 3. காந்தியடிகள் 4. தந்தை பெரியார்
விடை: 4. தந்தை பெரியார்

35) திராவிட நாடு என்ற இதழைத் தொடங்கியவர்
1. அறிஞர் அண்ணா 2. கலைஞர் 3. இ.வெ.கி.சம்பத் 4. தந்தை பெரியார்
விடை: 1. அறிஞர் அண்ணா

36) அண்ணாதுரைக்கு “அறிஞர்” என்ற பட்டத்தைச் சூட்டியவா
1. பாரதியார் 2. கல்கி 3. பாரதிதாசன் 4. கண்ணதாசன்
விடை: 3. பாரதிதாசன்

37) சென்னை மாகாணத்திற்கு “தமிழ்நாடு” என்ற பெயர் மாற்றத்தை 14.01.1969 இல் சட்டப்பூர்வமாக அறிவித்தவர்
1. அறிஞர் அண்ணா 2. கலைஞர் 3. இ.வெ.கி.சம்பத் 4. தந்தை பெரியார்
விடை: 1. அறிஞர் அண்ணா

38) நீதிதேவன் மயக்கம் என்ற நாடகத்தை எழுதியவர்
1. கலைஞர் 2. அறிஞர் அண்ணா 3. சோ 4. பம்மல் சம்பந்தமுதலியார் பெரியதம்பி
விடை: 2. அறிஞர் அண்ணா

39) தேசியம் காத்த வள்ளல் என்று திரு.வி.க.வால் போற்றப்பட்டவர்
1. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 2. காமராசர் 3. இராஜாஜி 4. வ.உ.சி. விடை: 1. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

40) குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்து போராடி வெற்றி கண்டவர்
1. ம.பொ.சி 2. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

H.R.C.PDKT

3. தந்தை பெரியார் 4. அறிஞர் அண்ணா
விடை: 2. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

41) அம்பேத்கரின் இயற்பெயர்
1. ராம்ஜி 2. போஸ்
3. பீமாராவ் 4. பிஸ்வாஸ்
விடை: 3. பீமாராவ்

42) இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கிய பேரறிஞர்
1.இராஜாஜி 2. அம்பேத்கர் 3. கோகலே 4. நேரு
விடை: 2. அம்பேத்கர்

43)விடுதலைக்கு பின் இந்திய அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றவர்
1.வல்லபாய்படேல் 2. நேரு 3. அம்பேத்கர் 4. ஆர்.கே. சண்முகம்செட்டியார்
விடை: 3. மருதகாசி

44) கருப்பு காந்தி என்று மக்களால் போற்றப்பட்டவர்
1. காமராசர் 2. இராஜாஜி 3. சி.சுப்பிரமணியம் 4. சத்தியமூர்த்தி
விடை: 1. காமராசர்

45) தமிழகத்தில் மாணவர்களுக்கு முதன் முதலில் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தவர்
1. எம்.ஜி.ஆர் 2. பக்தவச்சலம் 3. கலைஞர் 4. காமராசர்
விடை: 4. காமராசர்

46) "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வானோடு முன்தோன்றிய மூத்தகுடி" என தமிழினத்தின் தொன்மையைக் கூறும் நூல்
1. புறப்பொருள் வெண்பாமாலை 2. தண்டியலங்காரம்
3. அகநானூறு 4. புறநானூறு
விடை: 1. புறப்பொருள் வெண்பாமாலை

47) "உலகு" என்ற அடிச்சொல்லிற்குச்............. என்று பொருள்
1. சுற்றுதல் 2. தொங்குதல் 3. உலவுதல் 4. மேலெழுதல்
விடை: 1. சுற்றுதல்

48) "ஞால்" என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது தான் ............. என்ற தமிழ்ச்சொல் ஆகும்.
1. மேகம் 2. வானம் 3. ஞாலம் 4. உலகம்
விடை: 3. ஞாலம்

49) உலகம் உருண்டை என்பதை முதன் முதலாகப் பதிவு செய்தவர் .............. ஆவார்
1. திருவள்ளுவர் 2. கம்பர் 3. ஔவையார் 4. ஒட்டக்கூத்தர்
விடை: 1. திருவள்ளுவர்

50) தானே ஒளிவிடக் கூடிய ஞாயிற்றை தமிழர்கள் ………… என்றனர்
1. வெண்மீன் 2. விண்மீன் 3. நாள் மீன் 4. கோள்மீன்
விடை: 3. நாள் மீன்

51)ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று அந்த ஒளியை விடக் கூடியவற்றைத் தமிழர்கள் ………….. என்றனர்
1.வெண்மீன் 2. விண்மீன் 3. நாள் மீன் 4. கோள்மீன்
விடை: 4. கோள்மீன்

52) செந்நிறமாய் இருக்கும் கோள்
1. செவ்வாய் 2. வியாழன் 3. சனி 4. வெள்ளி
விடை: 1. இரா. மீனாட்சி

53) சூரியன் ஒவ்வொரு முப்பது பாகைக்குள் நுழையும் தோற்றத்தை தமிழர்கள் ………… என்றனர்
1. நாள் பிறப்பு 2. கோள்பிறப்பு 3. மாதப்பிறப்பு 4. மழைஉருவாதல்
விடை: 3. மாதப்பிறப்பு

54) தமிழர்கள் கேதுவை ………… என்றனர்
1. வால் நட்சத்திரம் 2. ராகு நட்சத்திரம் 3. வெள்ளி 4. புதன்
விடை: 1. வால் நட்சத்திரம்

55) பெருங்கதையில் குறிப்பிடப்படும் "எந்திரக் கிணறு" என்பது ………… குறிப்பதாகலாம்
1. கிணறு 2. ஆழ்துளைக் கிணற்றைக் 3. வட்டக் கிணறு 4. ஊற்று
விடை: 2. ஆழ்துளைக் கிணற்றைக்

56) உலகத்திலேயே பழமையான அணை
1. மேட்டூர் அணை 2. பெருஞ்சாணி அணை
3. பெருஞ்சாணி அணை 4. கல்லணை
விடை: 4. கல்லணை

57) பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம்………… ஆயிற்று
1. சித்த மருத்துவம் 2. இயற்கை மருத்துவம்
3. யுனானி மருத்துவம் 4. ஆயர்வேத மருத்துவம்
விடை: 1. சித்த மருத்துவம்

58) உலகில் பின் விளைவுகளற்ற ஒரே மருத்துவம்
1. யுனானி மருத்துவம் 2. இயற்கை மருத்துவம்
3. சித்த மருத்துவம் 4. ஆயர்வேத மருத்துவம்
விடை: 3. சித்த மருத்துவம்



H.R.C-PDKT

59) காந்தியடிகளுக்கு முன்புவரை இந்திய அரசியலில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர்
1. அன்னிபெசன்ட் அம்மையார் 2. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 1. அன்னிபெசன்ட் அம்மையார்

60) பிரம்மஞானசபையைத் தோற்றுவித்தவர்
1. முத்துலெட்சுமி ரெட்டி 2. அன்னிபெசன்ட் அம்மையார்
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 2. அன்னிபெசன்ட் அம்மையார்

61) காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்த முதல் பெண்மணி
1. முத்துலெட்சுமி ரெட்டி 2. அன்னை தெரசா
3. அன்னிபெசன்ட் அம்மையார் 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 3. அன்னிபெசன்ட் அம்மையார்

62) 'தமிழகத்தின் அன்னிபெசண்ட்' என்று அறிஞர் அண்ணாவால் புகழப்பட்டவர்
1. அன்னிபெசன்ட் அம்மையார் 2. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 2. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்

63) காந்தி கைது செய்யப்பட்ட போது அம்மையார் ஆங்கிலேயர்க்கு எதிர்ப்புக் காட்ட மூவண்ணக் கொடியை ஆடையாக உடுத்திக் கொண்டவர்
1. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் 2. அன்னிபெசன்ட் அம்மையார்
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 1. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்

64) தாசிகளின் மோசவலை என்ற நூலின் ஆசிரியர்
1. முத்துலெட்சுமி ரெட்டி 2. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 2. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்

65) இந்தியாவில் மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற முதல் பெண்மணி
1. முத்துலெட்சுமி ரெட்டி 2. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 1. முத்துலெட்சுமி ரெட்டி

66) இந்தியாவில் சட்டப் பேரவையின் முதல் பெண் உறுப்பினர்
1. ருக்மணிதேவி அருண்டேல் 2. முத்துலெட்சுமி ரெட்டி
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 2. முத்துலெட்சுமி ரெட்டி

67) புற்றுநோய் நிலையத்தை அடையாற்றில் ஏற்படுத்தியவர்
1. அன்னிபெசன்ட் அம்மையார் 2. அன்னை தெரசா
3. முத்துலெட்சுமி ரெட்டி 4. ருக்மணிதேவி அருண்டேல்
விடை: 3. முத்துலெட்சுமி ரெட்டி

H.R.C.PDKT

68) தன்னுடைய சகோதரியின் மரணத்தை விடவும் யாருடைய மரணம் தனக்குப் பேரிடியாக இருந்தது என்று காந்தியடிகள் குறிப்பிட்டார்?
1. முத்துலெட்சுமி ரெட்டி 2. மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்
3. அன்னை தெரசா 4. தில்லையாடி வள்ளியம்மை
விடை: 4. தில்லையாடி வள்ளியம்மை

69) ஜோகன்ஸ்பர்க்கில் தில்லையாடி வள்ளியம்மையின் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்தவர்
1. ஜவகர்லால் நேரு 2. வல்லபாய்படேல் 3. காந்தியடிகள் 4. யாருமில்லை
விடை: 3. காந்தியடிகள்

70) "யவனர் தந்த வினைமான் நன்கலம்
பொன்னோடு வந்து கறியொடு பெயரும்" என்பது ………. நாட்டுடன நடந்த ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தைக் குறிக்கிறது
1. கிரேக்க 2. எகிப்து 3. ரோம் 4. ஜாவா
விடை: 1. கிரேக்க

71) அதியமானின் முன்னோர்கள் எங்கிருந்து கரும்பைக் கொண்டு வந்தனர்?
1. இலங்கையிலிருந்து 2. எகிப்து 3. சீனா நாட்டிலிருந்து 4. ஜாவா
விடை: 3. சீனா நாட்டிலிருந்து

72) அறுவை வணிகர் என்பவர்
1. துணி விற்பவர் 2. அரிசி விற்பவர்
3. உப்பு விற்பவர் 4. கயிறு விற்பவர்
விடை: 1. துணி விற்பவர்

73) மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்து வரலாற்றுக்கு முந்தைய காலம் வரை உள்ள காலம்
1. கற்காலம் 2. தொன்மைக் காலம்
3. பெருங்கற்படைக் காலம் 4. பழங்காலம்
விடை: 2. தொன்மைக் காலம்

74) கிழார் வெளியில் கண்டறியப்பட்ட வெண்கலத்தால் ஆன புத்தர் பாதம், அரைவட்ட வடிவிலான நீர்த் தேக்கம் போன்றவை எந்த நகரம் இருந்ததை மெய்ப்பிக்கின்றன?
1.தென்மதுரை 2. நாகபட்டினம் 3. காவிரிபூம்பட்டினம் 4. மொகஞ்சதரோ
விடை: 3. காவிரிபூம்பட்டினம்

75) தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள "முந்நீர் வழக்கம்" என்ற தொடர் தமிழரின் கூறுகிறது
1. வான்வெளிப் பயணத்தை 2. கடற்பயணத்தை
3. தரைவழிப் பயணத்தை 4. நீரிலும் நிலத்திலும் செல்லும் பயணத்தை
விடை: 2. கடற்பயணத்தை

76) பரவை, புணரி, ஆர்கலி என்பன ………. குறித்து வழங்கும் சொற்களாகும்

1. கடல் 2. ஆறு 3. ஏரி 4. குளம்
விடை: 1. கடல்

77) சேர மன்னர்களுக்கு உரிய துறைமுகம்
1.பூம்புகார் 2. கொற்கை 3. முசிறி 4. பட்டினப்பாக்கம்
விடை: 3. முசிறி

78) மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது
1. வீடு 2. ஆடை 3. அணிகலன் 4. உணவு
விடை: 4. உணவு

79) தமிழர் மருத்துவத்தில் அனைத்து நோய்களையும் தீர்க்கும் சஞ்சீவி என்று கூறப்படுவது
1. உணவு 2. நீர் 3. இளநீர் 4. பால்
விடை: 1. உணவு

80) 'உடம்பார் அழியின் உயிரால் அழிவர்' என்று கூறியவர்
1. சுந்தரர் 2. கம்பர் 3. அகத்தியர் 4. திருமூலர்
விடை: 4. திருமூலர்

81) வள்ளலார் ஞானப்பச்சிலை என்று குறிப்பிடும் மூலிகை
1. ஓமவல்லி 2. தூதுவளை 3. முருங்கை 4. நெல்லி
விடை: 1. தூதுவளை

82) கண்பார்வையை ஒழுங்குபடுத்தும் கீரை
1. பசலைக்கீரை 2. அரைக்கீரை
3. முருங்கைக் கீரை 4. கரிசலாங்கண்ணிக் கீரை
விடை: 3. முருங்கைக் கீரை

83) சித்தர்களால் சரஸ்வதி என்று குறிப்பிடப்படும் கீரை
1. பசலைக்கீரை 2. வல்லாரைக் கீரை
3. முருங்கைக் கீரை 4. கரிசலாங்கண்ணிக் கீரை
விடை: 2. வல்லாரைக் கீரை

84) குமரி என்று அழைக்கப்படும் மூலிகை
1. கற்றாழை 2. அகத்திக் கீரை
3. முருங்கைக் கீரை 4. கரிசலாங்கண்ணிக் கீரை
விடை: 1. கற்றாழை

85) சிங்க வல்லி என்ற பெயரைக் கொண்ட மூலிகை
1. ஓமவல்லி 2. முருங்கை 3. தூதுவளை 4. நெல்லி
விடை: 3. தூதுவளை

86) திருச்சி விஜயரங்க சொக்கநாத நாயக்கரிடம் கருவூல அலுவலராகப் பணிபுரிந்தவர்
1. தாயுமானவர் 2. குமரகுருபரர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்
விடை: 1. தாயுமானவர்

87) "மூலன் மரபில் வரு மௌன குருவே" என்று தனது குருவைப் போற்றியவர்



H.R.C-PDKT

1. சிவப்பிரகாசர் 2. குமரகுருபரர் 3. தாயுமானவர் 4. மாணிக்கவாசகர்
விடை: 3. தாயுமானவர்

88) மனுமுறை கண்ட வாசகம் என்ற உரைநடை நூலின் ஆசிரியர்
1. இராமலிங்க அடிகள் 2. ஊரன் அடிகள்
3. சிவப்பிரகாசர் 4. மெய்கண்டார்
விடை: 1. இராமலிங்க அடிகள்

89) "உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுக்கோல்" என்று கூறியவர்
1. திருமூலர் 2. ஊரன் அடிகள்
3. சிவப்பிரகாசர் 4. இராமலிங்க அடிகள்
விடை: 4. இராமலிங்க அடிகள்

90) ……… … ………… திரு.வி.க.வின் மாணவர்கள் ஆவர்.
1. கல்கியும், வரதராசனாரும் 2. பாலசுப்பிரமணியன், வ.சு.ப. 3. வ.சு.ப., ச.வே.சு. 4. உ.வே.சா., தமிழண்ணல்
விடை: 1. கல்கியும், வரதராசனாரும்

91) தமிழ்நாடும் நம்மாழ்வாரும் என்ற நூலின் ஆசிரியர்
1. மு.வ. 2. ரா.பி. சேதுப்பிள்ளை 3. திரு.வி.க. 4. வ.உ.சி.
விடை: 3. திரு.வி.க.

92) வள்ளலாரின் பாடல்களைத் திருமுறைகள் என்றழைக்கக்கூடாது. அவை அருட்பாக்கள் அல்ல, மருட்பாக்கள் என்று கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவர்
1. சி.வை.தாமோதரம்பிள்ளை 2. இலங்கை ஆறுமுக நாவலர்
3. ரா.பி. சேதுப்பிள்ளை 4. ஆனந்தரங்கம்பிள்ளை
விடை: 2. இலங்கை ஆறுமுக நாவலர்

93) வள்ளலாரைப் "புது நெறி கண்ட புலவர்" என்று போற்றியவர்
1. பாரதியார் 2. சோமசுந்தரபாரதியார் 3. திரு.வி.க. 4. வ.உ.சி.
விடை: 1. பாரதியார்

94) வள்ளலாரின் கோட்பாடு
1. மக்கள் ஒருமைப்பாடு 2. ஆன்ம நேய ஒருமைப்பாடு
3. தேசிய ஒருமைப்பாடு 4. மனிதநேய ஒருமைப்பாடு
விடை: 2. ஆன்ம நேய ஒருமைப்பாடு

95) "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்று பாடியவர்
1. குணங்குடியார் 2. சிவப்பிரகாசர்
3. குமரகுருபரர் 4. தாயுமானவர்

விடை: 4. தாயுமானவர்

96) தாயுமானவரைப் பின்பற்றி பாடல்களை எழுதிய இஸ்லாமிய ஞானி
1. உமறுப்புலவர் 2. செய்யதுகாதிர் மரைக்காயர்
3. குணங்குடி மஸ்தான் சாகிபு 4. சவ்வாதுப் புலவர்
விடை: 3. குணங்குடி மஸ்தான் சாகிபு

97) கடவுள் ஒருவரே அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் என்று கூறியவர்
1. இராமலிங்க அடிகள் 2. குமரகுருபரர் 3. திருமூலர் 4. சிவப்பிரகாசர்
விடை: 1. இராமலிங்க அடிகள்

98) "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர்
1. குமரகுருபரர் 2. இராமலிங்க அடிகள் 3. ஊரன் அடிகள் 4. சிவப்பிரகாசர்
விடை: 2. இராமலிங்க அடிகள்

99 வள்ளலாரின் ஞானகுரு
1. மாணிக்கவாசகர் 2. சுந்தரர்
3. சம்பந்தர் 4. அப்பர்
விடை: 3. சம்பந்தர்

100) தமிழ் இலக்கியத்துள்ளே அடி எண்ணிக்கையில் பெரிய ஆசிரியப்பா பாடியவர்
1. தாயுமானவர் 2. குமரகுருபரர் 3. இராமலிங்க அடிகள் 4. சிவப்பிரகாசர்
விடை: 3. இராமலிங்க அடிகள்

H.M.RC-PDKT